<u>**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.**</u>

<u>CC. No. 60/2016</u>

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 08-ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி-4(PW-4)**-ன் வாக்குமூலம்** (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.ரஷ்யா **இளநிலை உதவியாளர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **கிருஷ்ணமூர்த்தி** | தொழில் | | - |
| த/பெ. | : | **இராமசந்திரன்** | **ஊர்** | | **திருக்காட்டுப்பள்ளி** |
| வயது | : | 78 | மாவட்டம் | | **தஞ்சாவூர்** |

<u>**08.10.2025**</u>

<u>**எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். காணொலி காட்சி மூலம் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். வழக்கறிஞர் ஆஜர்.**</u>

**முதல் விசாரணை :**

1) நான் திருக்காட்டுப்பள்ளியில் வசித்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும், எனது நண்பர். திருக்காட்டுப்பள்ளியில் நகை அடகு கடை வைத்துள்ளார்.

2) 20.05.2016 ஆம் தேதி மாதவன் என்பவரிடம் இருந்து நகை ஒன்று வாங்கியதாகவும். அது கவரிங் நகைபோல் உள்ளது என்றும். அ.சா.1 என்னிடம் சொன்னார். அந்த நகையை மாதவன் அடகு வைத்ததாக சொன்னார். அது குறித்து போலீசாரிடம் புகார் கொடுத்ததாகவும். நகையை அடகு வைத்தவர் துவாக்குடியில் பிடி பட்டுவிட்டதாகவும், அ.சா.1 என்னிடம் சொன்னார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

நான் சொல்லிய சங்கதிகள் அனைத்தும் அ.சா.1 சொல்லியதன் பேரில் தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./-எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No. 60/2016</u>

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 08–ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி–5(PW–5)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.ரஷ்யா **இளநிலை உதவியாளர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **செந்தில்குமார்** | தொழில் | | **சுயதொழில்** |
| த/பெ. | : | **பாக்கிய நாடார்** | ஊர் | | **திருக்காட்டுப்பள்ளி** |
| வயது | : | 45 | மாவட்டம் | | **தஞ்சாவூர்** |

**<u>08.10.2025</u>**

**<u>எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். காணொலி காட்சி மூலம் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். வழக்கறிஞர் ஆஜர்.</u>**

**முதல் விசாரணை :**

1) நான் திருக்காட்டுப்பள்ளியில் வசித்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும், திருக்காட்டுப்பள்ளியில் நகை அடகு கடை வைத்துள்ளார். நானும் அடகு கடை வைத்துள்ளேன். எனக்கு அவரை தெரியும்.

2) 20.05.2016 ஆம் தேதி அ.சா.1 ன் கடையில் யாரோ போலி நகை அடகுவைத்து விட்டு சென்றதாகவும். அப்போது அது அவருக்கு தெரியவில்லை என்றும் 3 நாள் கிழித்து என்னிடம் சொன்னார். திருக்காட்டுப்பள்ளி விலாசத்தை கொடுத்து நகையை அடகு வைத்து சென்றதாக சொன்னார். திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். துவாக்குடியில் அடகு வைத்தவரை பிடித்துவிட்டதாகவும். உண்மையான பெயர் மாதவன் என்று சொன்னார். அ.சா.1 னுடன் நானும் புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றேன். போலீசார் என்னிடம் விசாரிக்கவில்லை.

**<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் சொல்லிய சங்கதிகள் அனைத்தும் அ.சா.1 சொல்லியதன் பேரில் தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.